2018 ஜூலை 5]

(ஈ) சாய் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு சாய் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2018), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 4–30

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு சாய் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2018)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சொல்லி விட்டீர்கள். அவர் சொல்ல வேண்டும் அல்லவா? மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள். (குறுக்கீடு) எனக்குத் தெரியும். அவர் பேசுவார்.*

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, தமிழகத்திலே தனியார் பல்கலைக்கழகங்கள் கொண்டு வருவதை நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம். அதற்கான காரணங்களை நாங்கள் சொல்வதற்கு முன்னால், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், தான் பேசுகின்றபோது "ஏற்கெனவே மதுரை தியாகராஜர் கல்லூரியும், கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. பொறியியல் கல்லூரியும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களாக, தனியார் பல்கலைக்கழகங்களாக வருவதற்காக உங்களுடைய ஆட்சியிலே அன்றைக்கு எடுக்கப்பட்ட முயற்சியை நாங்கள் எதிர்த்தோம்" என்று சொன்னார்கள். நீங்கள் எதிர்த்தீர்கள். நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அன்றைக்கு கோவை பி.எஸ்.ஜி. கல்லூரிக்கோ, மதுரை தியாகராஜர் கல்லூரிக்கோ தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே தனியார் பல்கலைக்கழகம் என்ற அந்தஸ்து தரப்படவில்லை. காரணம், தமிழகத்திலே தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவிக்கக் கூடாது. கல்வி வியாபாரமாகி*

@ 5–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

விடக் கூடாது, ஏழையெளியவர்களுக்குத் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்கின்ற ஒரே நோக்கத்தோடு அப்போது செய்யப்பட்டது. இந்தியாவிலேயே அதிகமான அளவுக்கு அரசு பல்கலைக்கழகங்களும், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களும் இருக்கக்கூடிய மாநிலங்களிலே நம்முடைய தமிழகமும் ஒன்றாக இருக்கிறது.

இன்னொன்று, ஒரு கல்லூரி ஆரம்பிப்பதைப்போல, ஒரு தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதும் எளிதாக வந்துவிட்டால், அதற்குப் பிறகு புற்றீசல்போல தனியார் பல்கலைக்கழகங்கள் தமிழகத்திலே உருவாகி, தமிழகத்தினுடைய கல்வித்தரம் குறைந்துவிடும். இன்றைக்குத் தமிழகத்திலே கல்வித்தரம் உயர்ந்து இருக்கிறது. அதற்குக் காரணம், ஒரு கட்டுப்பாடு. ஆனால், தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படுவதன் மூலமாக அந்தக் கட்டுப்பாடு முழுவதுமாகத் தளர்த்தப்படுகிறது. ஒரு கல்லூரி சொந்தமாக அவர்களே தேர்வுகள் நடத்த வேண்டுமென்று சொன்னால், NAAC accreditation வாங்க வேண்டும். அதற்குப் பிறகு autonomous status வாங்க வேண்டும். அதற்குப் பிறகுதான் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஒரு தேர்வை அவர்கள் நடத்தி, தேர்வு முடிவை வெளியிட முடியும். ஆனால், இங்கே சாதாரணமாக எடுத்தவுடனேயே, 100 ஏக்கர் நிலமும், 50 கோடி ரூபாய் பணமும் இருந்தால் ஒருவர் தனியார் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்து விடலாமென்று சொன்னால், யார் வேண்டுமென்றாலும் ஆரம்பித்துவிட முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்திலே வரக் கூடாது. எங்கேயிருந்து உங்களுக்குக் கோரிக்கை வந்தது? தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கப் போகிறோம், தேவைப்படுவோர் எல்லாம் விண்ணப்பிக்கலாம் என்று அரசாங்கம் கேட்டதா? இல்லை. எனவே, இன்றைக்கு யாருக்கோ ஆதரவு தர வேண்டுமென்கின்ற ஒரு நோக்கத்தோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவிக்க வேண்டுமென்கிற நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது ஏழையெளிய மாணவர்களைப் பாதிக்கும். தமிழக மக்களுடைய கல்வித் தரத்தைப் பாதிக்கும்; இது முக்கியமான ஒன்று. எனவே, இதனை அடிப்படையாக மனதிலே வைத்துக்கொண்டு, இந்தச் சட்டத்தை நிச்சயமாக அரசு நிறைவேற்றாமல் இருக்க வேண்டும். ஏனென்று சொன்னால், மத்திய அரசாங்கம்,

UGC-யிலே நிகர்நிலைப் பல்கலைக்கழகத்திற்கான அனுமதி தருவதற்கு 10 ஆண்டு காலமாகிறது. ஆனால், எடுத்தவுடனேயே இங்கு தனியார் பல்கலைக்கழகத்தை வாங்கிவிட முடியுமென்று சொன்னால், அது சரியாக வராது. அதிலும் ஒருவர் உடனே வேந்தராக வருவார்; ஒருவர் ஐந்தாம் வகுப்புதான் படித்திருப்பார். அவர் வேந்தர்; அப்படியெல்லாம் இன்றைக்கு வரக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும்.

ஒரு காலத்திலே இதுபோன்ற தனியார் பல்கலைக்கழகங்களில் இருந்துதான் டாக்டர் பட்டமெல்லாம் விற்கப்பட்டது. இன்றைக்கு அதெல்லாம் கட்டுப்படுத்தப்பட்டதால்தான் படிப்புக்கு ஒரு மரியாதை இருக்கிறது. அந்த மரியாதை தமிழகத்திலே இருக்க வேண்டுமென்று சொன்னால், தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவிக்கக் கூடாது. அதை உற்சாகப்படுத்தாதீர்கள். இந்தச் சட்டத்தை, சட்டமுன்வடிவை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டு, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் நம்முடைய தமிழகத்திலே அதிகமாக இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். இங்கே 29 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அந்த 29 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலேயும் நாம் இப்போது தனியார் பல்கலைக்கழகத்தில் ஏழையெளிய மாணவர்கள் படிப்பதற்காக நிர்ணயித்திருக்கக்கூடிய 35 சதவிகித இட ஒதுக்கீடு தரப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் கேட்கின்றேன். அதேவேளையில், இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனியார் பல்கலைக்கழகங்களில் ஐந்தாம் வகுப்பு படித்தவர்கூட வேந்தராக வரலாமென்று சொல்கின்றார். ஆனால், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலே மேதகு ஆளுநர் அவர்கள்தான் வேந்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதையும் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த காலகட்டத்திலே அவர்கள் பி.எஸ்.ஜி.-யையும், தியாகராஜர்

[திரு. கே.பி. அன்பழகன்] [2018 ஜூலை 5

கல்லூரியையும் கொண்டு வந்தார்களென்றால், அப்படி கொண்டு வந்ததே தவறு. ஏனென்றால், அரசினுடைய ஒட்டுமொத்த நிதியையும் பெற்றுக்கொண்டு, அந்த நிறுவனமானது வளர்ந்தது. அப்படிப்பட்ட நிறுவனத்தை தனியார் பல்கலைக்கழகத்திற்குத் தாரைவார்க்கின்ற வகையிலேதான், அன்றைக்கு அவர்கள் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

பிற்பகல் 4–35

இப்போது 100 ஏக்கர் நிலமும், 50 கோடி ரூபாய் பணமும் இருந்தால் தனியார் பல்கலைக்கழகம் ஒன்று ஆரம்பிக்கலாமா என்று கேட்கிறார். அப்படியில்லை. 2015 ஆம் ஆண்டில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முன்னிலையில், தனியார் பல்கலைக்கழகத்திற்காக, சிறந்த பொறியியல் கல்லூரியான SSN பொறியியல் கல்லூரியோடு புரிந்துணர்வு ஒப்பந்தமானது போடப்பட்டது; MoU போடப்பட்டது; Global Investors Meet–ல் ரூ.250 கோடிக்கான ஒப்பந்தம் போடப்பட்டது. 9–9–2015 மற்றும் 10–9–2015 ஆகிய இரண்டு நாட்களில் MoU போடப்பட்டது. ரூபாய் 250 கோடியிலே தனியார் பல்கலைக்கழகம் உருவாக்கப்படும் என்று அன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் போடப்பட்டது. அதேபோல்தான், இன்றைக்கு உறுப்பினர் அவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கக்கூடிய சாய் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், 100 ஏக்கர் நிலம், 50 கோடி ரூபாய் deposit, அதற்கு மேலாக 320 கோடி ரூபாய் நிதியை செலவழிக்கின்ற வகையில் தனியார் பல்கலைக்கழகமானது தொடங்கவிருக்கிறது. கிட்டத்தட்ட 9 மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, மற்ற இடங்களிலெல்லாம் ரூ.1 கோடி, ரூ.2 கோடி, ரூ.5 கோடி, ரூ.10 கோடி என்றுதான் அவர்கள் வைப்பு நிதியாக வைத்திருக்கின்றனர். நிலத்தைப் பொறுத்தவரைக்கும், ஒரு சில ஏரியாக்களில் 20 ஏக்கர், 10 ஏக்கர், 5 ஏக்கர் இதுபோன்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். ஆனால், நல்ல முறையில் அமைய வேண்டுமென்பதற்காகத்தான், 100 ஏக்கர் நிலம் என்பதை இங்கே வலியுறுத்தியிருக்கிறோம். ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, உத்தரப்பிரதேசத்தில் 2011 ஆம் ஆண்டில் ஒரு சட்டம் இயற்றப்பட்டு, Shiv Nadar Foundation மூலமாக அங்கே அவர்களுடைய பல்கலைக்கழகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பல்கலைக்கழகத்தில் பத்து கோடி

2018 ஜூலை 5] [திரு. கே.பி. அன்பழகன்]

ரூபாய்தான் வைப்பு நிதியாக வைக்கப்பட்டு, அங்கே அரசு மூலமாக உயர் கல்வித் துறை செயலாளரும், D.C.–ம் உறுப்பினர்களாக இல்லாத நிலையில்தான், அவர்கள் 6 ஆண்டு காலமாக அந்தப் பல்கலைக்கழகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கின்றபோது, அடுத்த மாநிலங்களுக்கு இதுபோன்ற நிறுவனங்கள் செல்லக்கூடிய வாய்ப்பெல்லாம் இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டுதான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பி.எஸ். அவர்களும் இணைந்து, 2015 ஆம் ஆண்டில் Global Investors Meet–ன்போது ஒப்பந்தத்தில் போடப்பட்ட MoU–ஐ நிறைவேற்றுகின்ற வகையில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மேலும், ஒரு தனியார் பல்கலைக்கழகமானது 320 கோடி ரூபாய் செலவழித்து, நல்ல தரமான கல்வியை வழங்குகின்ற வகையில், அவர்களும் முன்வந்திருக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இந்தச் சட்டமானது இயற்றப்படுகிறது. இயற்றப்படவுள்ள தனியார் பல்கலைக்கழகச் சட்டங்களில், சார்ந்த பல்கலைக்கழகங்களுடைய கொள்கை முடிவுகள் தொடர்பாக அரசால் அறிவுறுத்தல்கள் வழங்கவும், அவற்றினை பல்கலைக்கழகங்கள் கடைப்பிடிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டங்களின்படி பல்கலைக்கழகங்கள் சரிவர செயல்படாத நிலையில், அவற்றின் அங்கீகாரத்தை இரத்து செய்வதற்கும் அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் ஆவணங்கள் அரசால் கேட்டு பெறப்பட்டு, அவற்றினை ஆய்வு செய்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இன்றைக்கு நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், அரசினுடைய கட்டுப்பாட்டில் அந்த 29 பல்கலைக்கழகங்களில் எதுவுமே இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், இன்றைக்கு 35 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெறக்கூடிய வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய அரசானது செயல்பட்டு, தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்கள் அந்தத் தனியார் பல்கலைக்கழகங்களில் படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்குகின்ற வகையில் அமையப் பெற்றிருக்கின்ற காரணத்தினால், இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) என்ன திரு. அர. சக்கரபாணி? (குறுக்கீடு) அது ஒன்றுமில்லை. (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர் பேசி முடித்துவிட்டார். (குறுக்கீடு) நீங்கள் Select Committee-க்கு அனுப்புங்கள் என்ற கோரிக்கையை வைத்தீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லவில்லை என்றால் என்ன அர்த்தம்; அதை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். அவ்வளவுதான், உட்காருங்கள்.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 51 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 51 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2018 ஜூலை 5] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 4–40

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு சாய் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு கரும்பு (கொள்முதல் விலையை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கரும்பு (கொள்முதல் விலையை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2018), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,